**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 315/2024**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07-ம் நாள் வெள்ளிக் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.03.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ஜெயபிரகாஷ்(PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தொழில்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன்.

16.09.2019 பிரதிவாதியின் கடன் விண்ணப்பம் வா.சா.ஆ. 1ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.09.2019 பிரதிவாதியின் கொதுவை ஒப்பந்தம் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10.09.2022 உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

14.10.2024 கணக்கு பேரேடு நகல் வா.சா.ஆ. 4 குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.